இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 174 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – தை 21 – திங்கள்கிழமை 03 பிப்ரவரி 2025 – மதுரை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 174 : Thiruvalluvar Year - 2056 - Thai 21 - Monday 03 February 2025 - Madurai 16 Pages ₹ 5.00


## 56வது நினைவு நாள் இன்று

# பேரறிஞர் அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணி!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் நடைபெறுகிறது!

**சென்னை, பிப்.3-**

**பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளையொட்டி, முதலமைச்சரும் கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று சென்னையில் மாபெரும் அமைதிப் பேரணி நடைபெறுகிறது. சென்னை வாலாஜா சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா சிலையில் இருந்து புறப்படும் இந்த அமைதிப் பேரணி அண்ணா நினைவிடத்தை அடைகிறது. அங்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார்.**

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் நினைவு நாள் இன்று! திராவிட முன்னேற்றக் கழகத்தை தோற்றுவித்து, தமிழ்நாட்டின் நலனை, தமிழ் மொழியின் சிறப்பினை போற்றிடும் வகையில் தன் வாழ் நாளெல்லாம் தன்னை ஒப்படைத்த பிதாமகன்! ‘இந்தி’த் திணிப்பின்போது உறுதியுடன் எதிர்த்து தாய் மொழியாம் தமிழ்மொழிக்கு போர்க் கவசமாக திகழ்ந்தவர் பேரறிஞர் அண்ணா! இன்றைக்கும் ‘இந்தி’ மொழியை திணிக்க ஒன்றிய அரசு பல வழிகளில் முயற்சித்தாலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை உறுதி ஒவ்வொரு தமிழனின் குருதியிலும் கலந்திருக்கிறது.

அவரது கொள்கை வழியில் ஆட்சி நடத்தும் திராவிட மாடல் அரசின் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ் மொழிக் காக்க அண்ணா அவர்களின் கொள்கை வழி நின்று அவரது போர்க் கவசத்தை அணிந்து இன்று தமிழ்நாட்டில் ‘இந்தி’ நுழையாமல் பேணி காத்து வருகிறார் என்பது நாமெல்லாம் அறிந்த ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் மனிதநேயத்தை, போதித்தவர். தமிழ்மொழியைக் காத்த பெருமகனார், தமிழ்நாடு என்று பெயர் சூட்ட முழுமுதல் காரணமாக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாள் இன்று!

அவரது நினைவு நாளையொட்டி அண்ணாவின் கொள்கை வீரர் திராவிட மாடல் அரசின் நாயகர், கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மாபெரும் அமைதி பேரணி சென்னையில் நடைபெறுகிறது.


அந்த அமைதி பேரணி நிறைவில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்ணா அவர்களின் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்துகிறார்.

இதுகுறித்து சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

காஞ்சி தந்த காவியத் தலைவர் – உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர் – தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ்நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் – கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகத்திற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர் – “இப்படை தோற்கின் எப்படை வெல்லும்” என்று தம்பிமார் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் – “மெட்ராஸ் ஸ்டேட்” என்ற பெயரை “தமிழ்நாடு” என்று பெயர் மாற்றம் செய்து தாய்க்குப் பெயர் தந்த தனிப் பெரும் தனயன் – சுயமரியாதைச் சுடரொளி – சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் – எழுத்து வேந்தர் – தென்னகத்தின் மிகப் பெரும் அரசியல் தலைவர் – **பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளினையொட்டி, முதலமைச்சர் – கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் கழக முன்னணியினர் இன்று (பிப்ரவரி – 3, திங்கட்கிழமை) காலை 7.00 மணிக்கு காமராசர் சாலையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவார்கள்.**

இந்த அமைதிப் பேரணி வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து புறப்பட்டு அண்ணா சதுக்கத்தை சென்றடையும்.

கழக இந்நாள் – முன்னாள் அமைச்சர்கள், இந்நாள் – முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு – பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நல உரிமைப் பிரிவு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அனைத்து அணியினரும் அண்ணா அவர்களின் நினைவு போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.



## ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்

# நல்லாட்சிக்கு மக்கள் தரும் மதிப்பெண்!



**நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவன் நம்பிக்கையுடன் எழுதும் வேண்டுகோள் மடல்.**

பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து முத்தமிழறிஞர் கலைஞர் காலத்திலும், அவர்கள் இருவருக்குப் பிறகும் தி.மு.கழகம் எத்தனையோ இடைத்தேர்தல் களங்களைச் சந்தித்திருக்கிறது. தற்போது நடைபெறக்கூடிய ஈரோடு கிழக்குச் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் என்பது எதிர்பாராத வகையிலும் மனதில் பெரும் சுமையுடனும் எதிர்கொள்ள வேண்டிய களமாக அமைந்துவிட்டது. 2021 சட்டமன்றத் தேர்தலில் ஈரோடு கிழக்கு தொகுதியில் தி.மு.க. கூட்டணி சார்பில் போட்டியிட்டு வென்றவர் காங்கிரஸ் கட்சி வேட்பாளரான ஈவெரா திருமகன் அவர்கள். அவருடைய அகால மரணத்தைத் தொடர்ந்து, 2023-ஆம் ஆண்டு நடந்த இடைத்தேர்தலில் அவரது தந்தையான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் களம் கண்டு மாபெரும் வெற்றி பெற்றார். கடந்த டிசம்பர் மாதத்தில் நம் அனைவரின் அன்பிற்குரிய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர், முன்னாள் ஒன்றிய அமைச்சர், தந்தை பெரியாரின் பேரன் திரு.ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களின் அதிர்ச்சி தரத்தக்க மரணத்தால் இந்த இடைத்தேர்தல் களத்தைச் சந்திக்கின்றோம்.

**இந்த முறை ஈரோடு கிழக்கில் திராவிட முன்னேற்றக் கழகம் போட்டியிட வேண்டும் என்று கழகத்தினர் விரும்பியது மட்டுமின்றி, அரசியல் சூழலை நன்குணர்ந்த தோழமைக் கட்சியான காங்கிரஸ் பேரியக்கமும் தீர்மானித்து அறிவித்ததைத் தொடர்ந்து, தி.மு.க., வின் வேட்பாளராக ஈரோடு கிழக்குத் தொகுதி மக்களின் அன்பைப் பெற்ற வி.சி.சந்திரகுமார் அவர்கள் களமிறங்கியுள்ளார்.** அமைச்சர் சு.முத்துசாமி அவர்கள் தலைமையில் கழக நிர்வாகிகளும் உடன்பிறப்புகளும் தொகுதியின் ஒவ்வொரு வீடாகச் சென்று கழகத்தின் மூன்றரை ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து வாக்கு சேகரித்து வருகின்றனர். கழக அரசின் **சாதனைத் திட்டங்களால் ஒவ்வொரு குடும்பமும் பயன் பெற்றிருப்பதால் தங்கள் வாக்குகள் உதயசூரியனுக்கே என்று ஈரோடு கிழக்கு வாக்காளர்கள் உறுதியளித்து வருகின்றனர்.**

உங்களில் ஒருவனான எனது தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் ஈரோடு மாவட்டத்தின் நலன் சார்ந்த பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. மாவட்டத்தின் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்தும் வகையிலும், **ஈரோடு மாவட்டத்தின் சிறப்பு மிக்க நெசவுத் தொழில், வணிகம் ஆகியவை வளர்ச்சி பெறும் வகையிலும் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன. அதில் ஈரோடு கிழக்குத் தொகுதி பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.**

## உங்களில் ஒருவன்

அவற்றில் முதன்மையான சில திட்டங்களை இங்கே குறிப்பிடுகிறேன்.

1. ஈரோடு கிழக்குச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பெரிய சேமூர் வார்டு 20 அம்பேத்கர் நகர் குடிசை மாற்று வாரியக் குடியிருப்பு பகுதியில் புதிதாக ஆழ்துளைக் குழாய் கிணறு, நீர்மூழ்கி பம்ப் மோட்டார் அமைத்து குடிநீர் விநியோகம் செய்வதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது.

2. ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட ஆர்.கே.வி. சாலையில் ரூ.29 கோடி மதிப்பீட்டில் புதிய நவீன காய்கறி சந்தை வளாகம் திறக்கப்பட்டு உள்ளது.

3. ஈரோடு ஈ.கே.எம் அப்துல் கனி மதரஸா ஆரம்பப் பள்ளியில் புதிதாக 5 வகுப்பறைகள் மற்றும் ஸ்மார்ட் கிளாஸ் வகுப்பறைகள் துவங்கப்பட்டுள்ளது.

4. ஈரோடு மாநகராட்சி, ராஜாஜிபுரம் பகுதியில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியில் 7 லட்சம் மதிப்பில் நவீன உடற்பயிற்சிக் கூடப் பணிகள் தொடங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

5. ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு நிதியில் 15 லட்சம் ரூபாய் மதிப்பில் கோட்டை முனிசிபல் காலனி மற்றும் பெரியசேமூர் திரு.வி.க. வீதியில் பள்ளிச் சுற்றுச்சுவர் மற்றும் கழிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது.

6. ஈரோடு சூரியம்பாளையம் 7-ஆவது வார்டில் ரூ.30 லட்சம் மதிப்பீட்டில் ஆரம்ப நகர்நல மையத்தின் கூடுதல் கட்டடம் விரிவாக்கப் பணிகள் தொடங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

7. சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் ரூ.10 லட்சம் மதிப்பில் கோட்டை பகுதி வார்டு 28 முனிசிபல் காலனி பகுதியில் அங்கன்வாடி மையத்திற்குச் சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்